Beginner Course - தேவன்/God

3

தேவனை அறிந்துக்கொள்ளும் வழிகள்

YESUDAS SOLOMON

பொருளடக்கம்

1. தேவனை அறிந்துக்கொள்வது என்றால் என்ன?
2. சில முக்கிய குறிப்புகள்
3. தேவனை அறிந்துக்கொள்ளும் 3 வழிகள்
4. தம்மை அறிந்துக்கொள்ள தேவன் நமக்கு கொடுப்பது என்ன?

தேவனை அறிந்துக்கொள்வது என்றால் என்ன?

1. தேவனை அறிந்துக்கொள்வது என்றால் என்ன?

1. தேவனை அறிந்துக்கொள்ளுவது என்பது வேறு; தேவனை குறித்து அறிந்துக்கொள்ளுவது என்பது வேறு
2. *Knowing God is different from Knowing about God*
3. தேவனை அறிந்துக்கொள்ளுவது என்றால் தேவனை தெரிந்து, புரிந்து, அறிந்து, அவரோடு ஐக்கியம்கொள்வது *(Relationship & Experience with God)*
4. தேவனை குறித்து அறிந்துக்கொள்வது என்பது தேவனை பற்றிய அறிவை மட்டுமே குறிக்கும் *(Knowledge of God)*
5. தேவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது அவரோடுள்ள ஐக்கியத்தையே

1. தேவனை அறிந்துக்கொள்வது என்றால் என்ன?

6. 1 கொரி 8:1-3 அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும். ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை. **தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்.**

7. 1 யோவா 4:7-8 பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; **அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்;**

சில முக்கிய குறிப்புகள்

முக்கிய குறிப்புகள்

1. முழு இருதயத்தோடும் தேடனும் - எரே *29:13* (உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்)
2. தேவனே தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார், புரிகிற அளவுக்கு வெளிப்படுத்துவார் - ரோம *1:19,20;* கலா *4:8,9;* அப் *14:17*
3. மனிதனால் தேவனை முழுமையாக அறிந்துக்கொள்வது முடியாத காரியம் - யோவா *1:18*

   அறிவில் நிறைவான தேவனை அறிவில் குறைவுள்ள மனிதனால் முழுமையாக அறிந்துக்கொள்ள முடியாது; காலங்களுக்கு அப்பாற்ப்பட்ட நித்திய தேவனை குறுகிய வாழ்நாட்கள் கொண்ட மனிதனால் முழுமையாக அறிந்துக்கொள்ள முடியாது; ஏசா *55:8,9; 57:15;* சங் *113:5,6;* யோபு *11:7*

தேவனை

அறிந்துக்கொள்ளும் வழிகள்

தேவனை அறிந்துக்கொள்ளும் வழிகள்

1. இயேசு கிறிஸ்துவின் மூலமாய்

- மத் *11:27* - பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், **குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச்** சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்
- யோவா *1:18* - தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான **குமாரனே அவரை வெளிப்படுத்தினார்**
- *1* யோவா *5:20* - நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் **தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும்** அறிவோம்;
- யோவா *14:6,7* - **என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்**

தேவனை அறிந்துக்கொள்ளும் வழிகள்

2. *BIBLE* - பரிசுத்த வேதத்தின் மூலமாய்

- எபி *1:1* பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் **பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்..**
- 2 தீமோ *3:16* வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; **தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்**, எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.
- 2 பேது *1:21* தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; **தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்**

தேவனை அறிந்துக்கொள்ளும் வழிகள்

2. *BIBLE* - பரிசுத்த வேதத்தின் மூலமாய்

- வேதத்தில் தேவன் யார் என்று இருக்கிறது
- தேவன் எப்படிப்பட்டவர் என்று இருக்கிறது
- அவருடைய பெயர்கள் இருக்கிறது
- அவருடைய கிரியைகள்/செயல்கள் இருக்கிறது
- அவருடைய சித்தம்/உள்ளத்தின் விருப்பம் இருக்கிறது
- என்று சொல்லிக்கொண்டே போகலாம்
- படிக்க படிக்க அதிக அதிகமாய் தேவனை அறிந்துக்கொள்ளலாம்

தேவனை அறிந்துக்கொள்ளும் வழிகள்

3. பரிசுத்த ஆவியானவர் மூலமாய்

- *1 கொரி 2:10-16* - நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.
- யோவா *16:13* சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

தம்மை அறிந்துக்கொள்ள தேவன் நமக்கு கொடுப்பது என்ன?

தம்மை அறிந்துக்கொள்ள தேவன் நமக்கு கொடுப்பது

எபே 1:17

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் **தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை** உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்..

முடிவுரை

- தேவனை அறிந்துக்கொள்வது எனபது அவரோடு ஐக்கியம் கொள்வது
- இந்த வீடியோ மூலமா கேட்டவைகள் உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நெனைக்கிறேன்.
- தேவனைக் குறித்து மேலும் அறிந்துக்கொள்ள எங்களுடைய மற்ற வீடியோக்களையும் பாருங்கள்.
- ஏதாவது கேள்விகள் இருந்தா *WhatsApp* அல்லது *Email* மூலமாக தொடர்புக்கொள்ளுங்கள்.
- தேவன் தாமே தம்மை அறிந்துக்கொள்ளும்படி ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்கு தந்தருளுவாராக

Thank You

BIBLE MINUTES

To know more, please watch other related videos from our YouTube channel or Facebook page and feel free to contact us for any further questions

By Phone / WhatsApp

+91 90190 49070
+91 76765 05599

Email

wordofgod@wordofgod.in

Social

YouTube: Bible Minutes
Facebook: Bible Minutes